ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

தலைமுறைக்கணக்காக சிரமப்பட்டு காரியத்தை ஸாதித்தவனை "பகீரதப் பிரயத்தினம் செய்து ஸாதித்தான்" என்றும், உண்மையுரைப்பதையே விரதமாகக்கொண்டவனை "ஹரிச்சந்திரன்" என்றும், இவைபோன்ற ஸந்தர்ப்பங்களில் பிராசீன இதிஹாஸங்களையொட்டின பற்பல நியாய வார்த்தைகளை இயற்கையாகவே பிராணிகள் உபயோகப்படுத்தி வருகின்றார்கள். அதனால் இந்தப்பிரசித்த வியவஹாரத்திற்கு மூலமான பகீரதன் முதலிய மஹான்களுடைய சரித்திரமும், அதைக் கூறும் இதிஹாஸ புராணாதிகளும் பிரமாணமென்றே அங்கீகரிக்கவேண்டும். அத்தகைய உத்தம சரித்திரத்தைக் கேட்போருக்கு நாமும் அதேவிதமாக முயற்சிசெய்து பெரியோர் காரியத்தை ஸாதித்து அதனால் பெருமையையும், கீர்த்தியையும் அடையவேண்டுமென்ற ஆசையும், அதற்குத் தக்க பிரவிருத்தியும், பலப்பிராப்தியும் உண்டாகின்றது. ஆகவே நம் முன்னோர்கள் தங்கள் வாழ்நாட்களிலும், பிந்தியகாலங்களிலும் சிரேயஸ்ஸை அடைய விரும்புவோருக்கு நன்மையைத் தேடிக்கொள்ள வழிகாட்டியாக திவ்ய சரித்திரங்களை நடத்திக் காட்டியிருக்கிறார்கள். தற்காலத்தில் சிலர் அப்பெருமையைத் தாங்களுமடைய விரும்புகிறார்கள். ஆனால் முன்னோர்கள் நடந்தவழியில் நடப்பதான உத்தேசம் இவர்களுக்கில்லை. நம் பெரியோர்கள் தங்கள் தங்கள் முன்னோர்களது காயிக வாசிக மானஸிக காரியம் அனைத்தையும், உலக நன்மைக்காகவே ஏற்பட்டதாகக் கருதுவார்களே அன்றி சுயநலத்தைப் பாராட்டி உலக நன்மையைக் கெடுத்துவிட்டதாக அவர்களிடம் பழி சுமத்தமாட்டார்கள். தற்காலத்தியவர்களோவெனில் வாய்கூசாமல் எவ்விதப் பழியையும் பெரியோர்கள் தலையில் சுமத்த கிஞ்சிற்றேனும் அஞ்சவேமாட்டார்கள். இவர்கள்தான் உலக நன்மைக்காகப் பாடுபடுகின்றவர்களாம். என்ன விபரீதஞானம். அன்றியும் நம் முன்னோர்கள் புருஷகாரத்தால் காரியத்தை ஸாதிக்கச் சக்திவாய்ந்தவர்களாயினும், தைவமெனப்படும், அதிருஷ்டத்தை மறந்துவிடமாட்டார்கள். தற்காலத்தியவர்களுக்கோ அந்த அதிருஷ்டமொன்றிருப்பதாகவும், அதற்குத் தக்கபடி பயன் நேருவதாகவும் நம்பிக்கையில்லை. எல்லாம் தங்களது முயற்சியாலேயே முடிந்துவிட்டதாக நினைக்கிறார்கள். மாரி, கோடை, குளிர்காலம், வருஷம்தோறும் மாறிமாறி வந்து அததற்குரியபடி பிராணிகளை ஆஹாரவிஹாராதிகளில் நடத்தி வைப்பதுபோல் மஹாகாலமாகிய கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகமெனப்படும். காலங்களும்கல்பம்தோறும் மாறிமாறி வந்துகொண்டு அதிருஷ்டத்திற்குத் தக்கபடி பிராணிகளை நடத்திக் கொண்டுபோவதாக நம் பெரியோர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். அதன்படிதான் நடந்துவருகிறது. அதற்காகத் தற்காலத்தியவர் செய்தவேலை என்னவோ தெரியவில்லை. ஆகையால் யாவரும் வீணாகக் கர்வப்படாமல் முன்னோர்கள் சென்ற வழியிலேயே நடந்து நன்மையை அடைவார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

சுக்ல-௵ கார்த்திகை-மீ ௯௨

## அதிருஷ்டம்.

தேசாந்தரஞ் சென்று திரவியந் தேடி வந்தவன் ஸொத்தை அபஹரிக்க முயன்றவனுக்கு அனுகூலமாய்ப் பேசுகின்றவனும் அந்த ஸொத்தை யபஹரிக்கின்றவன்தானல்லவா? அதுபோல ப்ரம்மதேவர் முதலிய முன்னோர்கள் பல்லாயிரம் வருஷம் தபஸ் செய்து வேதத்திற்கும் வேதியற்கும் ஹிதமாக ஸ்தாபித்துள்ள வர்ணாசிரமதர்மத்தைத் தொலைக்கவேணுமென்று கருதிய ராஜாங்கமோ, அதற்கனுகூலமாய்ப் பேசும் கூட்டமோ, அல்லது அந்த தர்மத்தைத் துலைக்க வழிதேடும் கூட்டமோ, அதற்கனுகூலமாய் நடந்துகொள்ளும் ராஜாங்கமோ அந்த வர்ணாசிரமதர்மத்தை நாசம்செய்யத் தலையிட்டதாகத்தான் கருதவேணும்.

ஸொத்துக்காரன் சிரமப்பட்டுத்தேடிய திரவியத்தைப் பறிகொடுத்துவிடாமல் காப்பாற்றிக்கொள்ள வலுத்தவர்களைச் சரணமடைந்து அவர்களது சகாயத்தால் சொத்தைக் காப்பாற்றிக்கொள்வதுபோல் வேதியர்களும் தங்களுக்கு பிரம்மாதி பரம்பரையாய் கிடைத்த அழியாப்பொருளாகிய வேதம், அதன்வாயிலாக வந்த வர்ணாச்ரமதர்மம் இவைகளை அழிக்கக்கருதிய இராஜாங்கம், அதற்கு சாதகமாய் நின்றதோர் கூட்டம், இவைகளின் முயற்சி பலிக்காமலும் தங்கள் சொத்து அழியாமலும் இருக்கஸர்வசக்தி வாய்ந்து வலுத்தவனாய் விளங்கும் பரமேசுவரனையும் தேவர்களையும் சரணமடைந்து சொத்தைப் பறிகொடுத்துவிடாமல் காப்பாற்றிக்கொள்ள முயலுவார்கள். இவர்களது முயற்சி வலுக்குமா, மற்றவரது கக்ஷி வலுக்குமா? என்று ஆலோசித்தால் எவருக்கு நல்ல அதிருஷ்டம் இருக்கின்றதோ அவருக்கு அனுகூலம் கிடைக்கும். கலியுகம் முடிவுவரையிலும் வர்ணாசிரம தர்மம் நம் பரத நாட்டில் நிலைத்திருக்குமெனக் குறிப்பிடும் புராணாதிகளின் மூலமாக வர்ணாசிரமதர்மத்தைக் காக்கமுயலும் வேதியரது அதிருஷ்

-ட்மே வலுத்திருப்பதாகத் தெரியவருகிறது. இக்கலிதொடங்கி ஐயாயிரம் வருஷத்துக்குள் வர்ணாசிரம தர்மத்தை அடியோடு கெடுக்கவந்த பௌத்தாதி மதத்தினரது பெருங்கூட்டமும் அத் தகைய அனேக அரசாங்கமும் தற்சமயம் இவ்விடமிருப்பதாக தெரியாமலிருப்பதே வேதியாரது நல்ல அதிருஷ்டத்தைக் காட்டு கின்றது. அதனால் தற்காலத்தில் வைதிகரது சதாசாரங்களைத் தடு ப்பவர் களுக்கு சில சமயம் வெற்றி பெற்றதுபோல் மின்னினாலும் நீடித்திருக்கப்போவதில்லையென்று நம் பிரமாண மூலமாக அறி கிறோம்.

अधर्मेणैधते तावत् ततो भद्राणि पश्यति ।
ततस्सपत्नान् जयति समूलस्तु विनश्यति ॥

"அதர்மத்தால் மேன்மேலும் அபிவிருத்தியடைவான். அதி லிருந்து அனேக சுபங்களையும் பெறுவான். சத்துருக்களை யும் ஜயிப்பான். கடைசியில் அடியோடு நசித்துவிடுவான்" என்று பிரமாணக் கிரந்தங்கள் முறையிடுகின்றன. தர்மத்தைக் கெடுத்தவனும், அதர்மத்தையடுத்தவனும் ஆயுஸ்லோடு இருக்கப் போவதில்லையென்று ஜோதிஷ சாஸ்திர நூல்களும், வைத்தியசாஸ் திர நூல்களும் அறிவிக்கின்றன. கீழ் மூன்றுயுகங்களிலும்பெரும் பாலும் எல்லாப் பிராணிகளும் சாஸ்திரங்களில் நம்பிக்கைவைத்து அவைகளிற் கூறியுள்ள தர்மங்களை விதிவழுவாது செய்திருப்ப தாக நம் பூர்வ சரித்திரம் தெரிவிக்கின்றது. அதன் பயனாக மேல்வரும் சிருஷ்டி தர்மானுகூலமாயிருக்குமேயன்றி அதையழிப் பதாயிருக்காது. ஆகவே நல்ல அதிருஷ்டத்தின் பயனாக வரப் போகின்றதும், நல்லதாகவே இருக்கும் என்றதை நம்பி யாவரும் தர்மத்தையே தாங்கி நிற்பார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

---

## ஸனாதன தர்மாபிமானிகளுக்கு ஓர் விக்ஞாபனம்.

ஏ ஆர்யதர்மாபிமானிகளே! பூர்வத்தில் பத்மாசுரன் என் னும் ஓர் அசுரன் ஸ்ரீ பரமேசுவரனிடம், வரன் வாங்கி அந்த வர னையே அப்பொழுதே பரமேசுவரனிடமே பரீக்ஷை செய்யவந் தான் என்று ஓர் கதை உண்டு. அதைப்போல் இப்பொழுது

முன் தேர்தலில் நம் காலைப்பிடித்துக்கெஞ்சி நம்மிடம் அனுமதி வாங்கி நம் பிரதிநிதிகளாய் சட்டசபையில் உட்கார்ந்திருக்கும் தகாபொம்மைகளாகிய நம் பிரதிநிதிகள் நம்மை அலக்ஷியம் செய்து சாரதாமசோதாவை ஆதரித்தும், நாளது ஏப்ரல் ௴ முதற்கொண்டு அமுலுக்குவரும்படிக்கும் ஒட் கொடுத்திருக்கின்றார்கள். இவர்கள் கையில் மிகப்பெரியவனுகத் தன்னை நினைத்துக்கொண்டு நடிக்கும் சிலர் சொற்படி ஸ்வராஜ்யம் கொடுத்திருந்தால் நம் இந்தியர்களை மிருகத்திற்கு பேதமில்லாமலே எவ்வளவோ சட்டம் செய்திருப்பார்கள். இவர்கள் சொல்வதை எல்லாம் கவர்ன்மெண்டாரவர்கள் சட்டம் செய்துவிடமாட்டார்கள். வரிகளை ஏதாவது குறைக்க வேண்டுமென்றால் அந்த மசோதாவை தங்கள் அதிகார பலத்தால் தள்ளிவிடுவார்கள். நமக்குள் சண்டைகளை வளர்த்துக்கொள்ள எவ்வளவு மசோதாக்கள் வேண்டுமானாலும் அவைகளை செய்துகொள்ள அதிகாரம் கொடுத்துவிடுவார்கள். இந்தச் சட்டத்தை எவ்வளவு எதிர்க்க வேண்டுமோ எதிர்த்துப் பார்க்கவேண்டும். முடியாதவரையில் ௸ சட்டத்தை எதிர்த்து ஸத்தியாக்ரஹம் செய்தால் முடிவில் கண்டிப்பாய் ஜெயம் கிடைக்கும் என்பது திண்ணம். ஆகையால் ஒவ்வொரு கிராமங்களிலும் சபைகள் கூடி ௸ மசோதாவை கண்டித்து கெவர்மெண்டாருக்கு தீர்மானங்களை அனுப்புவதுடன் ஜில்லாசபை, மாகாணசபைகள் கூட்டி ஏற்பாடு செய்யும்படிக்கு ஒவ்வோர் கிராமங்களிலும் வேலை செய்யவேண்டும் அகில இந்திய ஸனாதன தர்ம மகாநாடு சென்னையில் நாளது ௴த்தில் கூடப்போவதால் அதற்குப் பிரதிநிதிகள் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் போகவேண்டிய ஏற்பாடு செய்யும்படிக்கும் ௸ மகாநாட்டிற்கு தொகைகள் வசூல் செய்து அனுப்பும்படிக்கும் உடனே ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் இந்தச் சட்டத்தால் பாதகமில்லை என்றிருந்தால் ஆகாரமும் மேல்காட்டினரைப்போல் செய்யும்படிக்கு சட்டமும், இன்னும் பல சட்டங்களும் மேல் விழுவதற்கு காத்திருக்கின்றன. விக்டோரியாமகாராணியாரவர்கள் கொடுத்த வாக்கிற்கு விரோதமாக இப்பொழுது செய்திருக்கும்சட்டத்தைப்பற்றி எதிர்ப்பதில் கண்டிப்பாய் ஜெயம் கிடைக்கும். இதைப்பற்றி பார்லிமெண்டு சபைக்கும், நம் மஹாராஜாவுக்கும், நம் தர்மங்களை எடுத்துக்காட்ட இவ்விடமிருந்து நம்

பிரதிநிதிகளை கூடி இந்தியஸனாதனதர்ம மகாநாடு அனுப்பும்படிக்கும் ஏற்பாடு செய்யவும். உடனே எல்லோரும் முயற்சி செய்யவும். தூக்கம் வேண்டாம். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்." ஸ்ரீ ராமகிருஷ்ணர்கள் நம் பக்கமிருந்து ஜயம் கொடுப்பார்களாக.

M. S. சுந்தரேசய்யர்,
செம்மங்குடி.

---

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

# சோழமன்னர்களின் சரித்திரம்.

(கூ0அ-வது பக்கத்தொடர்ச்சி)

காவலர்கள்:— ஏ அரசே! பிரதாபத்தினால் வணங்கும்படி செய்யப்பட்ட சிற்றரசர்களையுடையோனே! கர்னாடகதேசத்துப் பிராமணரொருவர் வாயிலில்வந்து நிற்கின்றார். தாகங்கொண்ட சாதகபக்ஷிக்கூட்டம் நீருண்ட மேகத்தைக் காணவிரும்புவது போல் உன்னைக்காண விரும்புகிறார்.

காவலர்களின் மொழி கேட்டவரசன், 'மனையாளுடன் வந்திருக்கும் மறையோன் யார்? தாமதமின்றி அவனை உள்ளே அழைத்துவாருங்கள்' என வேலையாட்களை உத்திரவிட்டான். வேலையாட்களும் வாயிலினின்றும் அவ்வந்தணனை உள்ளே அழைத்துவந்து சபைநடுவே விடுத்தனர். அரசனும் அவரை வணங்கி யுபசரித்து, அவரால் அளிக்கப்பட்ட ஸ்ரீ காசிவிசுவநாதரின் திருநீற்றை நெற்றியில் அணிந்துகொண்டு மிக்க வணக்கத்துடன் சொல்லலானான்.

சுந்திரசோழன்:— ஹே பிராமணரே! எங்கிருந்து வந்தீர்? உம் வரவால் இத்தேசம் பரிசுத்தம் பெற்றது. என்னிடமிருந்து என்ன பெறவேணுமென்று உம் மனதிற்கருதுகிறீர்? உம் எண்ணங்களை நான் பூர்த்திசெய்வேன்.

பொருட்சுவை பொதிந்துள்ள அரசன்மொழிகேட்ட அம்மறையோன் மனமகிழ்ச்சியுடன் கூறலானான்.

அந்தணர்:— ஏ வேந்தே! நூறுவருஷங்கள்வரைக்கும் தீர்க்காயுள் பெற்று வாழ்வாயாக. நீயோ பிராமணபக்தியிற் சிறந்தவன். சோழசமுத்திரத்துதித்த சந்திரன்போன்ற நீ இவ்வாறு

உரைப்பது ஆச்சர்யப்படத்தக்கதன்று. உன்னிடமிருந்து பொருள்களையோ, வீட்டையோ, போஜனத்தையோ, வஸ்திரா பாணங்களையோ பெற விரும்பவில்லை. விசுவேசரின் பூர்ணு னுக்கிரஹத்தினுல் என்னிடம் எல்லாம் நிறைந்திருக்கின்றன. நான் இராமேசுவரஞ் சென்றுவரும்வரையில் „சிறுபெண்ணும் கர்ப்பிணியுமான என் மனைவி தந்தைபோல் உன்னுல் காப் பாற்றப்படட்டும்.

அரசனும் அத்தம்பதிகளைப் பூஜித்து உபசரித்து அப்படியே யாகட்டுமென்று ஏற்றுக்கொண்டான். பிராமணனும் அங்கு ஓர் இரவு தங்கி, இராமேசுவரம் செல்லப்புறப்பட்டான். சோழமன்ன னும் அரசியையும், நபும்ஸகர்களான அந்தப்புரவேலையாட்களையும், அவ்வந்தணமடந்தைக்கு உணவு முதலானவைகளளித்துக் காப் பாற்றிவருமாறு உத்திரவளித்தான். அரசனுல் இவ்வாறு உபசரிக் கப்பட்ட அம்மாது பக்ஷ்யபோஜ்ய வஸ்திராதிகளைப் பெற்று அரசி யுடனும் சேடிகளுடனும் சந்தோஷமாய்க் காலங்கழித்துவந்தாள்.

இவ்வாறு ஒருவருஷம் செல்லவே மறையோனும் கங்கை நீரால் இராமேச்சுரருக்கு அபிஷேகம் செய்வித்து மதுரை திரு நெல்வேலி கன்யாதீர்த்தம் முதலியவைகளைத் தரிசித்துக் கொ ண்டு கேரளதேசம் பாண்டிநாடுமுதலியவைகளைச்சுற்றிக்கொண்டு கடைசியாக அரசனின் அரண்மனையை நாடினுன். தன் மனை யாளின் நடத்தையை சோதனை செய்யக்கருதி அன்றிரவுமிக்க இருள் நிறைந்த ஓரிடத்தில் நின்றுகொண்டு அம்மாதின்கையைப் பற்றினன்.

“ஹா ஹா ! அயோக்கியனுன யாரோர் புருடன் என் கை யைப் பற்றுகிறுனே தந்தைபோல் இச்சோழ மன்னனும், தாய் போலச் சித்திரவல்லியும் என்னைக் காப்பாற்றி வருகையில் யார் இவ்வாறு செய்யத் துணிந்தது என்ற அவ்வந்தணர் குலத்துதி த்தமாது கதாலானுள்.

அவ்வழு குரலைக்கேட்ட அரசன் கையிற் கத்தியுடனே ஓடி வந்து யக்ஞோபவீதம் பூண்ட அப்பிராமணனை வெட்டி வீழ்த்தி னுன். பிறகு வெட்டுண்ட அச்சரீரத்தை விளக்கின் வெளிச்சத் தில் உற்று நோக்கி, அந்தணனைக் கொலைபுரிந்தோமென்பதை அறிந்து தனக்கு பிரும்மஹத்தி நேர்ந்ததைக் குறித்து மிக்க மனக்

நொந்தான். அப்பெண்மணியும் இறந்தது தன் கணவனென்பதை அறிந்து அலறி அழுது உடன்கட்டை ஏறிவிடுவதென்ற தீர்மானத்துடன் மன்னனை நோக்கிக் கூறலானாள்.

அந்தண ஸ்திரீ:— ஏ வேந்தே உனக்கு அறியாமையால் இப் பிரும்மஹத்தி நேர்ந்தது. அரசே உன்னிடம் நான் மகளைப் போல் வளர்ந்து வந்தேன். நீயும் என்னைத் தந்தைபோல் காப்பாற்றியதால் நீயே எனக்குத் தந்தையாவாய். இவ்வரசியே எந் தன் தாய். நானும் கணவனுடன் சுவர்க்கம் செல்லுகின்றேன். கணவனே தெய்வம், அவனைப் பின்பற்றி செல்வதே மேல். நான் இனி முகூர்த்த நேரமளவு உயிர் பிழைத்திரேன். அரசே! எனக்கு உத்திரவு அளிப்பாயாக.

தனக்குப் பிரும்மஹத்தி நேரிட்டதால் மனநொந்தவரசன் பிராமணியினுரையைக் கேட்டு மிக்கவருந்திச் சொல்லலானான்.

சுந்திரசோழன்,— என்னை நம்பிய மறையோனைக் கொலை புரிந்தேனே! இது காரணம்பற்றி இந்த மாதும் உயிர்விடுவாளாகில் மிக்கப் பாவியான எனக்கு ஸ்திரீஹத்தியும் ஏற்படுமே; இனி எனக்கு இவ்விராஜ்ஜியத்தால் யாது பயன்? தெய்வம் என்னை இந்நிலையில் விட்டதே? யாது செய்வேன்? சோழவேந்தர்களுகிய ஓர் உபவனத்தையெறிக்கும் பிரும்மஹத்தி புரிந்தவனும் நல்ல கீர்த்தி பெற்று விளங்கிய இச்சோழவம்சத்தின் புகழை அழித்த என்னைச் சுடுங்கள்.

மந்திரிகள்:— அரசே! எல்லாங்காலத்தின் செயல். அறியாமையால் நீ செய்த பிரும்மஹத்திக்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்துகொள். நீ அதிகம் வருந்தினால் இப்பிராமணியும் உயிர் துறப்பாள்.

சுந்திரசோழன்:— ஏ மாதுசிரோமணியே! உயிருள்ளளவும் உனக்கு வேண்டுவன செய்து உபசரித்துவருகிறேன். விரதங்களையும் தானங்களையுஞ்செய்துவருவாயாக. என்னிடம் கருணை பாராட்டுவாயாக.

அரசன் இவ்வாறு வேண்டியும் அவள் கணவனுடனேயே செல்வேன் எனக்கூறினாள். அரசியும் மற்றுமுள்ளோர் யாவரும் கண்ணீருங்கண்ணுமாய் நின்றனர். சோழமன்னனும் அழுதுகொண்டு அவ்வந்தணமாதை ஸ்னானஞ்செய்வித்து, கந்தம் புஷ்பங்

கள் வஸ்திரம் ஆபரணங்களிவைகளாலலங்கரித்து, அபரவிதிப்படி அப்பிராமணனுடன் எறித்தான். பன்னிரண்டு நாள்கள்வரையிற் செய்யவேண்டிய கிருத்தியங்களை முடித்துப் பிராமணர்களைக் கொண்டு கயையில் தனித்தனியே அவ்விருவருக்கும் பிண்டம் கொடுக்கச்செய்தான்.

## 26-வது அத்தியாயம்.

முனிவர்கள்:— ஏ ஸூதமுனிவரே! ஐயோ! மிக்கப் புண்ணிய சாலியான சோழேந்திரனுக்கும் அறியாமையினுல் ஏற்பட்ட ஹத்திதோஷம் எவ்வித புண்யகர்மாவினுல் விலகியது? ஏ தவ சியே! அழகாய்ப் பேசும்வன்மைவாய்ந்த நீங்கள் அவ்வரசனுல் எந்தவிடத்தில் என்ன காரியஞ்செய்யப்பட்டதென்பதை எங்களுக்கு முக்கியமாகக் கூறும்.

இருஷிகளால் வினவப்பட்ட ஸூதர் கைகூப்பிக்கொண்டு சோழேந்திரன்கதையைக் கூறலானுர்.

ஸூதர்:— அந்தணரைக் கொன்றதால் வருந்தமுற்ற சோழ மன்னன் இரவுபகலாகத் துக்கப்பட்டுக்கொண்டு, ஊணுமுறக்க முமின்றி மெலிந்தனன். உருக்கிவார்த்த தங்கத்திற்கொப்பான சரீரமும் நிரங்குன்றி மாறுதலடைந்தது. அவ்விராச்சியத்தில் மாரி பொழிவதொழிந்தது. எப்பொழுதும் இடிகள் விழத் தலைப்பட்டன. இரவுநேரங்களில் பிசாசுகளும் நரிகளும் நாய் களும் விகாரமாய்க் கூச்சலிடவாரம்பித்தன. திக்குகளிலெல் லாம் புகை சூழ்ந்தன. பூமியிற் பயிர்கள் அழிந்தன. அரச னுக்குப் பிரும்மஹத்தி ஏற்படவே அவனுடைய ராச்சியத்தில் இவ்வாறு உற்பாதங்கள் உற்பவித்தன. அதுகண்டு அவ்வரசன் மறையோர்களைக்கொண்டு பல சாந்திகளைச்செய்வித்தான். இந் நிலையையடைந்த நான் என்செய்வதென விசாரமுற்று மந்திரி களைநோக்கிக் கூறலானுன்.

சோழன்:—

ब्रह्महत्यार्दितो नित्यं सदा छायेव यातु माम् ।
कृष्णाङ्गी घोरवदना करालश्मश्रुदंष्ट्रिणी ॥
तर्जयन्ती दण्डहस्ता पृष्ठतो याति मां सदा ।

நான் பிரும்மஹத்தியால் எப்பொழுதும் பீடிக்கப்படுகிறேன். கருத்த உடலோடும், கொடூரமுகத்தோடும், பயங்கரமான மீசை

யுடனும், தெத்திப்பற்களுடனுங்கூடிய பெண்ணுருவுடன் கையிற் கோல்கொண்டு எப்பொழுதும் என்னைப்பயமுறச்செய்துகொண்டு பின்தொடருகிறது. மஹாபாபியாகிய நான் எவ்வுபாயத்தாற்சுகம் பெறலாம் என்பதை வேதசாஸ்திரங்களை நன்கு கற்றறிந்தவர்களுடன் ஆலோசித்து அதனைத் தாமதமின்றிச் செய்வேன். அவர்கள் அவ்வாறு கூறுவாராயின் என் பாவம் தொலையுமென்பதிற் சந்தேகமில்லை.

அதுகேட்ட அமைச்சர்கள், தக்க பிராமணர்களைக்கொண்டு மனு, பராசரர் முதலிய பெரிய மஹரிஷிகளால் இயற்றப்பட்ட ஸ்மிருதிகளை நன்காராயச்செய்து, கேட்டறிந்துவந்து மன்னனை நோக்கி உரைக்கலானார்கள்.

மந்திரிகள்:—

अज्ञानकृतहत्यायाः प्रायश्चित्तं तनुव्ययः ।

ஏ வேந்தே! அறியாமையாற் செய்த ஹத்தி தோஷத்திற்கு உயிர் துறப்பதே பரிஹாரமாகும். ஆதலால் நீங்கள் தனதான்யங்களைச் செலவிட்டு காவேரியின் கரையிலுள்ளவைகளும் மஹரிஷிகளால் அர்ச்சிக்கப்பட்டவைகளுமான ஸ்வாயம்புவலிங்கங்களினால் ஆலயங்களைக்கட்டுவீராக. ஒவ்வொரு க்ஷேத்திரங்களிலும் முக்கியமாய் அக்கிரஹாரங்களை நிர்மாணஞ்செய்யும். வேதமறிந்தோரும் குடும்பிகளுமாகவுள்ள தக்க அந்தணர்களுக்கு மஹா ஷோடஸ தானங்களையும், ஆயிரம் கோதானங்களையும், கன்யா தானங்களையும் ஏராளமாகக் கொடுத்துவாரும். எளியவர்கள், நாதனில்லாதோர், குருடர்கள், நொண்டிகளிவர்களுக்காக்ப்பிராக. அன்னசத்திரங்கள், மடங்கள், உத்யானவனங்கள், தடாகங்கள் இவைகளை நிர்மாணஞ் செய்யும். பெரிய ஸ்தலங்களில் ஆயிரம் ஸ்வர்ணகோதானங்களைச் செய்யும். கங்கை, காவேரி முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்னானம் செய்யும்.

सेतुं व्रज नृपश्रेष्ठ दर्शनात्पापनाशनम् ॥

பார்த்தாவுடன் பாபம் விலகும். ஸேதுவுக்குச் சென்று இராமேசுவரருக்கு மண்டபங்களைக் கட்டுவீராக. இவைகளே பாபம் நீக்கும் முறைகளாக ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருக்கின்றன.

அரசனும் அவ்வாறே மறையோர்களின் மொழிகளையமைச்சர்கள் வாயிலாகக் கேட்டு, புண்யநதி நதங்களையடைந்து ஸ்னா

னம் செய்து பிறகு இராமேசுவரம்சென்று, சிவாலயத்தைக்கட்டு வித்து, வடக்கே கூப்பிடுதூரத்தில் மண்டபங்களையும், விமானங்க ளையும், கோபுரங்களையும் நிர்மாணஞ்செய்தான். அரசன் காவே ரியின் கரையிலுள்ள க்ஷேத்திரங்களில் ஷோடச தானங்களைப் பதினறு முறைகள் செய்தான்.

ஸூதர்:— அரசன் வேதங்களிற் தேர்ந்த அந்தணர்களுக்கு ஆயிரம் பசுக்களை அளித்தான். காவேரியின் கரைகளிலுள்ள ஒவ்வொரு க்ஷேத்திரங்களிலும் அறுசுவை பொருந்திய பக்ஷ்ய போஜ்யங்களுடன் கோடிப்பிராமணர்களுக்கு அன்னமிட்டான் தகுந்தவர்களுக்கு கன்யாதானம் முதலியனச் செய்தான். கார்த்திகை மாதத்தில் சிவாலயங்களிலும், விஷ்ணுவாலயங்க ளிலும் தீபோத்ஸவம் செய்தான். இவ்வாறு தானம் முதலி யன செய்துகொண்டு இவ்வரசன் **12**-வருஷங்களைக் கழிக்க வே ஓர் தினம் அவ்வந்தண தம்பதிகள் அரசன் கனவிற் தோ ன்றிச் சொல்லலுற்றனர்.

## 27 அத்தியாயம்

ஸூதர்:—

பிராமணதம்பதி:— சோழமன்னனே உனக்குச் சிறிதுதான் பிரு ம்மஹத்தி பாக்கியிருக்கிறது. காவேரியின்கரையிலுள்ள நூறு க்ஷேத்திரங்களில் சிவனை ஆராதித்து மிக்க கோரமான இப் பாபத்தினின்றும் முழுவதும் விடுபடுவாயாக. அறியாமையாற் பிராமணவதை செய்தாய். நீ வீணில் வருந்தாதே. உன்னல் இப்புவியிற் பூஜிக்கப்பட்ட நாங்களிருவரும் பிரமனிருப்பி டஞ் செல்கிறோம்.

அரசன் தான் கனவிற்கண்டவற்றைமந்திரிகளிடம்கூறினன். பிறகு ஸ்ரீகண்டம் முதலிய க்ஷேத்திரங்களைச் சுற்றினன். இரா ஜ்ஜியத்தில் தன் மகனை இருக்கச்செய்து கொஞ்சம் ஸைன்யங்க ளுடனும், மனைவியுடனும் கிளம்பிச்சென்று திருவையார், கும்ப கோணம், மாயூரம், திருவெண்காடு, சாயாவனம், குற்றாலம், திருவாரூர், வேதாரண்யம், கதகாரண்யம், ஸ்ரீவாஞ்சியம், கதளீ வனம், காச்யாரண்யம், திருவிடமருதூர், வைதீசுவரன்கோவில், பந்தநல்லூர், முதலிய நாலாபக்கங்களிலுமுள்ள க்ஷேத்திரங்களி லும் அங்குள்ள தீர்த்தங்களிலும், ஸ்னனம்செய்து சங்கானே

வணங்கி ஸ்தோத்திரங்கள் செய்துவந்தும், சுந்தரசோழனை அப் பிரும்மஹத்திகனவிற்றேன்றிபயமுறுத்திக்கொண்டே இருந்தது.

பிறகு அரசன் திருவிடமருதூர் சென்று காவேரியில் மூழ்கி ஆலயத்துட்சென்றான்.

तत्र प्राग्गोपुरस्याग्रे ब्रह्महत्या स्थिराभवत् ।
जानुन्यस्तस्वमस्ता सा दृश्यतेऽद्यापि सा द्युतः ॥

அங்கு கீழ்கோபுரவாசலின்முன்னிலையில் அப்பிரும்மஹத்தி ஸ்திரமாகவிருந்தது. ஆதலால் இன்னும் முழந்தாளிற்றன் தலையைச் சாய்த்துவைத்துக்கொண்டு அஃது அங்கேயே காணப்படுகின்றது.

அரசன் சிவாலயத்துட்சென்று மஹாலிங்கவடிவமாகவுள்ள மஹேசனையும், அம்மனையும், விக்கினேசரையும் கண்டு வணங்கி ராகுவின் வாயினின்றும் தப்பிய மதிபோல் விளங்கலானான். பிறகு கண்களில் நீர் ததும்பச் சிவனைத் துதிக்கவாரம்பித்தான்.

ஸுந்திரசோழன்:— இத்திருவிடமருதூரில் வசிப்போர்களுக்கு வேண்டிய வான்களையளிப்பவரும் தேவதேவரும், பினகத்தைக் கையிற் கொண்டவரும் கணேசரால் பூஜிக்கப்பட்ட வடிமலர்களையுடையவருமான மஹாலிங்கமென்னும்மஹாதேவரே! உம்மை வணங்குகிறேன்.

உலகங்களுக்கெல்லாம் தலைவரும், மன்மதனையுங் காலனையுந் துலைத்தவரும், வேதாந்தத்தால் உணரப்படுவோரும், பிரமன் திருமால் முதலியோரால் வணங்கப்பெற்றவரும் கங்கையைத் தலையிற்றாங்கியவரும், சந்திரனைச் சடைமுடியிற்றரித்தவருமான மஹாலிங்கர் என்னும் மஹாதேவரே! உம்மை வணங்குகிறேன்.

பகாசூதியைக் கொன்றவரும் வ்யோமகேசரும் ஸம்ஸாரபந்தத்தையறுப்பவரும் எண்ணுருவமுடையோரும், தேவர்களாலும் அசுரர்களாலும் வணங்கப்பெற்ற வடிமலர்களையுடையவருமான மஹாலிங்கரென்னும் மஹாதேவரே! உம்மை வணங்குகிறேன்.

உலகிலடங்காதவரும் உலகங்களைப் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலுக்குங்காரணமானவரும் உலகிற் காரிகாரணமும் உலகமுழுவதும் அந்தர்யாமியாய் விளங்குகிறவரும் ஓங்காரத்தினுண்மைப்பொருளுமான மஹாலிங்கர் என்னும் மஹாதேவரே! உம்மை வணங்குகிறேன்.

இவ்வாறு சுந்திரசோழன் துதிக்கையில் ஆகாசவாணி ஒன்று உண்டாயிற்று.

அசரீரிணீ:— ஏ மன்னனே! நீ என்னை வணங்கித் துதித்ததால் உன்னைச் சூழ்ந்த பிரும்மஹத்தி துலைந்தது. காவேரியில் மூழ்கி என்னை ஒரு முறைக் காண்கின்றவனின் பாபங்களெல்லாம் விலகும். ஏ அரசனே! மேற்கிலுள்ள திருபுவனத்தில் எனக்கு கைங்கர்யம் செய்வாயாக.

சிவனுணைப்படி அச்சோழன் அங்கு சென்று கோபுரங்களை யும் மண்டபங்களையும் நிர்மாணம் செய்தான். மத்தியார்ச்சுனேச ருக்கு நான்கு பிராகாரங்களைச் செய்தான். ஆலயத்துள் நின்றும் மேல்புரமாக அரசன் செல்லுகையில் சுந்திரசோழன் பிரும்மஹத்தி பயத்தினின்றும் காக்க எண்ணங்கொண்டவரும், அவன் கைங் கர்யத்தால் அனந்தங்கொண்டவருமான சங்கார் அங்கு தன் குமாரனுகிய சக்தியைக் கையிலேந்திய குமரனை ஸ்தாபனம் செய் தார். புஷ்யோத்ஸவத்தில் அரசன் காவேரீ நதியில் மனைவியு டன் மூழ்கி பிரும்மஹத்தியினின்றும் விடுபட்டான்.

குஹகணேசருடனும், தேவியுடனும் விருஷபாரூடான மஹேசனைத் தரிசிக்க கைலியில் ஓர் அசரீரி கேட்டது

அசரீரிணீ:— புஷ்பத்தில் என்முன் காவேரியில் மூழ்கியதால், ஹத்திதோஷம் விலகியது. ஏ சோழ வேந்தே! உன் விருப்பம் எல்லாம் பெறுவாயாக. மத்தியார்ஜுனேசரின் கைங்கர்யத் தால் பத்தினியுடன் கைலாஸவாசம் பெறுவாயாக.

இம்மொழி கேட்ட அரசன் சங்கரரை வணங்கிச்சென்முன். பிறகு அவன் நடுக்கமுற்ற சரீரத்துடன் தன் பத்தினியுடனும்திரு புவனம் அடைந்தான். அப்பொழுது ஓர் அசரீரி தோன்றிற்று

அசரீரிணீ:— ஏ சோழனே இனி பயத்தையும், நடுக்கத்தையும் விட்டொழி. நானே கம்பஹாரீசுவரன் இங்கு எனக்குக்கோ புரங்களையும், பிராகாரங்களையும் கட்டுவித்துக் கைங்கர்யம் செய்வாயாக.

அவ்வாணைப்படியே அரசன், பிருஹதீசுவரன் ஆலயம்கட்டு வதின் நிமித்தம் தன் பாட்டனுல் ஆதரிக்கப்பட்ட சோமவர்மா வின் வம்சத்திலுதித்த ஓர் சிற்பியை அழைத்துவந்து வஸ்திராலங் காராதிகளால் உபசரித்து பிருஹதீசுவர ஆலயத்தினுள் காற்

பங்கு குறைவாக கம்பஹரேசரின் கோபுரத்தைக் கட்டிமுடித்து தேவிக்கும் ஓர் சிறந்த ஆலயத்தை நிர்மாணம்செய்தான். அதற்கு மஹாபூஜையை நிறைவேற்றி உக்கிர நாசிம்மனைப் பிளக்கும் சரபவ உருவம்படைத்த சங்காரனையும் செய்தான். சுந்தரசோழன் 60-வயதளவாண்டு இச்சோழ ராஜ்ஜியத்தைத் தன் மகனிடம் ஒப்புவித்து, சிவகைங்கர்யங்கள் செய்ததன் பயனாக மனையாளுடன் வெள்ளிமலைமேவிச் சிவகணமாக அமர்ந்தான்.

## 28-வது அத்தியாயம்.

காலாந்தகனை அர்ச்சிப்பதில் விருப்பமுள்ள காலகாலன் என்னுஞ்சோழன் நற்குணங்கள் வாய்ந்த குணவதீ என்னும் மனையாளுடனும் மந்திரிகளுடனும் நீதிவழுவாது உலகாண்டுவந்தான். சிவகைங்கர்யத்தில் ஊக்கங்கொண்ட அவ்வரசன் பந்தநல்லூர் (கந்துகபுரம்) கஞ்சனூர், திருவாவடுதுறை, ஸ்ரீவாஞ்சியம், திருமயிலாடுதுறை, (விஞ்சிலாரண்யம்) மாதவீவனம், திருவீழிமழலை முதலியவைகளிற் சிவாலயங்களின் பிராகாரங்களையும் கோபுரங்களையும் கட்டச்செய்தான். பிறகு அரவிந்தவனம், நதீபுரம், திருபுவனம், வேத்திரவனம், பிரும்மக்ஞானேச்சுவரம்முதலிய வேறு சில சிவாலயங்களையும் விஷ்ணுவினாலயங்களையுஞ் செய்துமுடித்து திருப்பனந்தாளை (தாளவனம்) அடைந்தான்.

அங்குள்ள தாளவனேசரின் லிங்கம் முன்பு மிக்கஉன்னதமாகவிருந்து இப்பொழுது தாழ்மைபெற்றிருக்கிறது.

முன்னொருகாலத்தைபர்ச்சிக்கும் அர்ச்சகர்கள் சூதகத்தடையால் வாதிருக்கையில் அவ்வம்சத்திலுதித்த ஓர் பிரும்மசாரிச்சிறுவன் பத்துதினங்கள் பூஜிக்குமாறு அனுப்பப்பட்டான். அச்சிறுவன் ஆலயத்துட்சென்று, பிரமனாலும், திருமாலாலும் காணவியலாத முடியையுமடியையுமுடைய அத்தாளவனேசர் என்னும் லிங்கத்தைக் கண்ணுற்று, எவ்வாறு அர்ச்சிப்பதெனக் கவலைகொண்டு 'எ தேவேசரே! மஹேசரே! என்னைக் காப்பாற்றுவீராக' எனக் கதறினான். அதைக்கண்ட அக்கருணாமூர்த்தி தன் தலையைத் தாழ்த்திக்கொண்டார் சிறுவன் சந்தோஷத்துடன் தைலம், பஞ்சாமிருதம், இளநீர், சந்தனம், சுத்தநீர் இவைகளால் அபிஷேகஞ்செய்து துடைத்து, நெற்றியிற் சந்தனப்பொட்டிட்டு தலையில் பூமாலையைப் போட்டு, பில்வார்ச்சனை செய்து, தூபதீபங்

கள் காட்டி, மணியையடித்துக்கொண்டு பாத்திரத்திலுள்ள அன்னத்தை முன்னிலையில் வைத்து, 'ஈசனே! இதனைச்சாப்பிடும்' எனக் கூறியழுதான். அச்சிறுவன் பார்த்துக்கொண்டிருக்கையில் சங்கரர் அவ்வன்னத்திலிருந்தும் ஐந்து கபளங்கள் எடுத்துண்டார். பிறகு அச்சிறுவன் நீராஜனஞ்செய்து தேவீ, ஸ்கந்தர், விநாயகர், ஸோமாஸ்கந்தர், நடேசர், பைரவர், நந்தி முதலியவர்களுக்குள் நிவேதனம் செய்து, மீதத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்றான். பாலன் நிவேதனஞ்செய்த மீதத்தைத் தாய்முன் வைக்கவே அதனைக் கண்ணுற்றுத் துக்கமடைந்த தாய் உரைக்கலானாள்.

தாய்:— பாதியன்னத்தைக்காணோமே, யாருக்குக்கொடுத்தாய்? வீட்டில் நீயும் நானும் எதனையுண்பது? நமக்கு வேறு வீடோ, நிலமோ யாதொன்றுமில்லையே. சிவனுக்கு நிவேதனஞ்செய்த அன்னமே நமக்குள்ளது. ஏ குழந்தாய்! அர்ச்சகர்களாகிய நமக்குப் பகவானளித்துள்ளதிதுவே. வயதிற்சிறிய குமாரனையுடைய என்னை எல்லோரும் அலக்ஷ்யஞ் செய்கின்றனர். என் செய்வது.

தாயின் சொல்லைக் கேட்டுத் துக்கமடைந்த மைந்தன் சொல்லுற்றான்.

பாலார்ச்சகன்:— பாதியன்னத்தைக் கடவுளே உண்டார். மீதமுள்ள பாதியை உன் கையிற்கொடுத்தேன். வேறொருவருக்கும் கொடுக்கவில்லை.

இதுகேட்ட மாதா கோபங்கொண்டு கல்லுருவம் பெற்ற கடவுள் எவ்வாறு போஜனத்தைப் புஜிக்குமென்று பலவாறுபேசினாள். இவ்வாறு எட்டுதினங்கள் செல்லவே அம்மாது பாதி உணவை குறைவதால் சாப்பிடவன்னம் போதாது. பசி மிகுந்து கோபமுண்டு ஆலயத்திற்கு ஓடிச்சென்று சிறுவன் பூஜை செய்வதையும், சிவலிங்கம் மிகவும் தாழ்ந்திருப்பதையும் பாத்திரத்திலிருந்து அன்னத்தைச் சிவனெடுத்து உண்பதையும், கற்கனிிடுக்கின் வழியே கண்ணுற்றுத் துக்கமடைந்தாள்.

'ஏ ஈசனே! இச்சிறுவன் பாத்திரத்தில் அன்னத்தை முன்னே வைத்து உண்ணுமாறு வேண்டுகையில் இவ்வாறு தினம் உண்பீரானால் பசியினால் வருந்தும் நான் எவ்வாறு பிள்ளையுடன்

பிழைத்திருப்பது'? என்று கணவனையிழந்த அம்மாது வெளியே கதருவதைக் கேட்டுச் சங்கரன் பாத்திரத்தினின்றும் கையை எடுத்துக்கொண்டு, லிங்கத்துள் மறைந்தார். சிறுவனும் தாயின் செயலால் வருத்தமடைந்து வீடுசென்றான்.

அதுமுதல் தாளவணேசுரின் லிங்கம் மிக்கத் தாழ்மையை அடைந்து விட்டது. அதுகண்டு காலகாலனென்னும் சோழனாகிய பக்தன் அந்த லிங்கத்தை உயர்த்த எண்ணங்கொண்டு பல ஆட்களைக்கொண்டு லிங்கத்தைக் கயிர்கட்டி இழுக்கச்செய்தான். அப்பொழுது கயிர்களெல்லாம் அறுந்துபோயின. சிலர் இரத்தத்தைக் கக்கினர். மற்றும் சிலர் மூர்ச்சையடைந்து வீழ்ந்து பூமியின் மேலாமையைப்போல் புரண்டனர். அரசன் லிங்கத்தின் கழுத்திற் சுளுக்கிட்டு இழுக்கையில் ஏ மன்னனே நீயும் கழுத்தில் கத்தியை வைத்துக்கொண்டு அதன்மேல் கயிற்றை மாட்டிக்கொண்டு உன் கழுத்துத் துண்டித்து விழும்வண்ணம் செய்தாலல்லது இத்தாளவனேசுரென்னும் லிங்கம் கிளம்பாதென ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று.

அதுகேட்டு தைரியமனமுடைய காலகாலனென்னும்சோழமன்னன் காவேரியில் மூழ்கி பஸ்ம ருத்திராக்ஷங்களிணிந்து மனையாளுடன் சிவாலயத்துட்சென்றான். அங்கு சென்று தாளவணேசரை வணங்கி, எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையில் கழுத்தில் கத்தியை வைத்துக்கொண்டும், அதன்பேரில் கயிற்றை கட்டிக்கொண்டும், மற்றொரு பக்கத்தை லிங்கத்தின் கழுத்திலும் சுளுக்கிட்டு "ஈசனே காப்பாற்று" என்று உரைத்துக்கொண்டு இழுக்கலானான். அரசனின் களுத்தில் நின்றும் இரக்கதாரைகள் பெருகலாயிற்று. அவன் மனைவியாகிய குணவதீ அரசன் பின்நின்றுகொண்டு அங்கு மொய்க்கும் ஈக்களையெல்லாம் ஓட்டிக்கொண்டு தைரிய மனத்துடன் ஒன்றும் பேசாதிருந்தாள்.

அமைச்சர்களெல்லோரும் கண்ணீர் ததும்ப நின்றனர். ஜனங்களெல்லோரும் 'இஃதென்னவாச்சரியம், இவனுக்குச் சிவனிடம் எவ்வளவு பக்தி; சிவனுக்காகத் தன் உயிரைக் கூட மாய்த்துக்கொள்கிறானே என்ன தைரியம். இந்தச் சோழவேந்தனின் ஹாஸ்யச் செயலைப்பார். நம் கண்ணாற் பார்க்கக்கூட முடியவில்லையே என் செய்வது? என கதறலானார்கள்,

கழுத்துச்சிறிதுமாத்திரம் ஒட்டிக்கொண்டிருக்கையில், அரசனின் பக்தியைக்கண்டு வியப்புற்ற தேவியால் சிவனைக் காப்பாற்றும் என்று வேண்டப்பட்ட சங்கரன் லிங்கத்தினின்றும் அம்மனுடன் தோன்றி வேந்தனின் கையைப் பிடித்துக்கொண்டார். தாளவணேசரென்னும் லிங்கமும் எல்லோரும் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கையில் மேலே கிளம்பிவிட்டது. பக்தியாற் சந்தோஷமுற்ற சங்கரன் தன்முன்னே மனையாளுடன் வணங்கிநிற்கும் சோழேந்திரனது கழுத்தைத் தடவிக்கொடுக்கவே அது முன்போலாயிற்று.

பிறகு ஈசன் ஏ சோழவம்சச் சந்திரனே! என் பக்தர்களுள் நீயே மிக்க பாக்கியவான். என் ஸாரூப்யம் உனக்கு அளித்தேன். நீயும் மனையாளுடன் கைலை செல். உன் மகனை உன் ஸ்தானத்தில் முடி சூட்டிவை. அவன் என்னுடைய ஆலயத்தை நிர்மாணம் செய்யட்டும். நீ விமானத்தில் ஏறிச் செல் என உரைத்து மறைந்தார்.

பெரிய ஓர் தவசியான அச்சோழமன்னன் கல்யாணசோழனிடம் இராஜ்யத்தை ஒப்புவித்து தாளவணேசரின் கைங்கர்யத்தையும் செய்யுமாறு கட்டளையிட்டான்.

ஸூதர்:— அந்தக்காலகாலன் தன் 70-வயதில் மனைவியுடன் உயர்ந்த ஓர் விமானத்தின்மீதேறி தேவவாத்தியங்கள் முழங்க வானவர்கள் பூமாரி பொழிய வெள்ளிமலையை அடைந்தான். இதனைக் கண்ணுற்ற ஜனங்கள் மிக்க வியப்புற்றனர். இவ்வரசனின் கதை மிக்கப் புண்ணியமானது.

(தொடரும்)

என். வைத்திநாதசாஸ்திரி,
ஸாஹித்யசிரோமணி
ஸரஸ்வதிமஹால் தஞ்சாவூர்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமா னுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.